**அம்பாறை நகர சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் 2016 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 12,400,292 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,421,234 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 2,979,058 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதியான ரூபா 53,390 தொகை ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடை வாடகை வருமானம் ரூபா 1,274,616 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 946,825 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 327,791 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரேட்டின் பிரகாரம் கடை வாடகை வருமானம், நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,641,036 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,059,086 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 581,950 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரேட்டின் பிரகாரம் சந்தை அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 1,346,200 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,760,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 413,800 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 176,000 தொகையான ஏக்கர் வரி வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரிப் பெறுமதி ரூபா 3,337,181 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,106,385 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 230,796 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

2016 சனவரி 01 இல் உள்ளவாறு கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ஆரம்ப மீதிக்கும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கின் பிரகாரம் காணப்பட்ட மீதிகளுக்கும் இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இந்த வேறுபடுத்தல்களுக்குரிய நாட்குறிப்புப் பதிவுகள் சபையினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்கு விபரம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் மீதி | 2016 சனவரி 01 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா | ரூபா. |
| காசு | 8,681,805 | 8,660,667 | 21,138 |
| ஒப்பந்த உடன்படிக்கை பிணை | 422,834 | - | 422,834 |
| நூலக வைப்புக்கள் | 16,130 | 21,780 | 5,650 |
| பெறுமதிசேர் வரி (வற்) | 3,087,182 | 3,106,386 | 19,204 |
| விருந்தினர் விடுதி சேவைக் கட்டணம் | 729,626 | 851,193 | 121,567 |
| தொழிற்படு மூலதனம் | 32,330,200 | 29,860,792 | 2,469,408 |

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிராக காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| கடன்பட்டோர் | 26,551,896 | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| கடன்கொடுத்தோர் | 4,031,236 | கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் வேலை நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 9,027,064 ஆன மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 5,919,316 ஆன மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 3,107,748 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வீத வரியும், வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய வருமான மூலங்களில் 09 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணம் என்ற வருமானத் தலைப்புக்களில் 16 சதவீதம் முதல் 18 சதவீதம் வரையிலான குறைவையும் காண்பித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தலும் பராமரித்தலும், பிரயாணச் செலவினம், வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற செலவினங்களில் 52 சதவீதம் முதல் 432 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நலன் செலவினங்களில் 70 சதவீதம் வரையிலான குறைவையும் காண்பித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வீத வரியும் வரியும்

2012 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 21,144,135 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 வாடகை வருமானம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 946,825 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட ரூபா 3,337,187 பெறுமதிசேர் வரித் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு

இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 67,940 முத்திரை வரித்தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 12 மில்லியனுக்கு மேற்படுமாயின் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான சபையின் வரி அறவிட வேண்டிய வருமானம் ரூபா 29,830,800 ஆகக் காணப்பட்ட போதிலும், பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்திருக்கவில்லை.

(ஈ) பயன்படுத்தப்படுகின்ற 39 காணிகளின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 910,164 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

### 3.2.1 தெயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (தேசத்திற்கு மகுடம்) அம்பாறை பொதுமக்கள் பூங்கா நிர்மாணம்

(அ) பூங்காவின் சமயலறை நிர்மாணம் ரூபா 4,432,775 செலவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2014 யூலை 02 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும், 2017 யூலை 18 ஆந் திகதி வரையிலும் அக்கட்டிடம் எந்தப் பணிகளிலும் பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பூங்காவின் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள இடத்தில் நிலத்தை அமைப்பதற்காக 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி ரூபா 352,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இறப்பர் காபட் பயன்படுத்தாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) பூங்காவின் அருகில் இறங்குத்துறை மற்றும் பக்கச் சுவர் நிர்மாணம் ரூபா 02 மில்லியன் பூர்த்தி செய்யப்பட்டு 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த இறங்குதுறைக்குத் தேவையான படகைக் கொள்வனவு செய்வதற்குக் கிடைத்திருந்த ரூபா 1.5 மில்லியன் நிதிஏற்பாடு இதுவரையிலும் பயன்படுத்தப்படாமை மற்றும் குளத்தின் நீர் இறங்கு துறைக்கு அருகில் வழிந்தோட முடியாத முறையில் இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 02 சதவீதம் முதல் 267 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கடடுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் தஐறகள் தொடர்பில் சபை விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | i. சொத்துக்களை கணக்குகளுக்கு கொண்டு வருதல். |
| | ii. நாட்குறிப்பு பதிவுகளை தயாரித்தல். |
| (ஆ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடுதல். |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டைச் சரியானதாகத் தயாரித்தல் |
| (ஈ) களஞ்சிய நிர்வாகம் | விரைவாக சரி பிழைகளை கண்டறியக் கூடிய முறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் |
| (உ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |